# கட்சியையும் - மக்களையும் காத்திட கழகத் தலைவராகப் பொறுப்பேற்ற கலைஞர்!

## ( நாவலரும், எம்.ஜி.ஆரும் தந்த வாக்குமூலங்கள் )




பேரறிஞர் அண்ணா மறைவுக்குப்பிறகு, முத்தமிழறிஞர் கலைஞர் முதல்வரானதும் தலைவரானதும் எப்படி என்று வரலாற்றுச் செய்திகளை நாம் மறந்துவிட முடியாது.

சற்றொப்ப 54 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில் (27.7.1969) கலைஞர் அவர்கள் தி.மு.க.வில் தலைவர் பொறுப்பை ஏற்றார்.

1969 பிப்ரவரி, 3 ஆம் நாள் நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள் மீளாத் துயரில் ஆழ்த்தி விட்டுச் சென்றார்.

இந்தத் துயரச் சூழலில்தான் ஆட்சியையும், கட்சியையும் காப்பாற்றப்பட வேண்டிய கடப்பாடு இருந்தது. யார் முதல்வர்? என்ற கேள்வி எழுந்த நிலையில், கழகத் தோழர்கள், பொது மக்கள், அரசியல் நோக்கர்கள், பத்திரிகையாளர்கள் என எல்லாருடைய மத்தியிலும் எதிர்பார்ப்புகள் மேலோங்கி நின்றன.

நாவலர் நெடுஞ்செழியனா? கலைஞரா? என்ற வினாவிற்கு விடையளிக்கும் வகையில், கலைஞரே முதல்வராக்கப்பட்டார். இதுபற்றி அன்றைய கழகப் பொருளாளராக இருந்த எம்.ஜி.ஆர் அவர்களே ஒரு பொதுக்கூட்டத்தில் மனந்திறந்து பேசினார்.

கலைஞர் முதலமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கும், புதிய அமைச்சரவைக்கும் பாராட்டுக் கூட்டம், சென்னை, ஆயிரம்விளக்குப் பகுதியில் கே.ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது.

1969, ஏப்ரல் 1 அன்று நடந்த அக்கூட்டத்தில், எம்.ஜி.ஆர். அவர்கள் கலந்து கொண்டு பேசிய பேச்சை "மாலை முரசு" நாளிதழ் வெளியிட்டுள்ளது.

"யார் முதல்வராக வரவேண்டுமென்று பெரும்பான்மையோருடன் கலந்து பேசிய போது, கலைஞர்தான் வரவேண்டுமென்று அனைவரும் தெரிவித்தார்கள்.

அதற்குப்பிறகு நானும், நீங்கள்தான் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்தினேன்.

இத்தனைக்குப் பிறகும் அவர் சம்மதிக்கவில்லை. மாறனை அனுப்பி வைத்தார். "கலைஞருக்கு முதலமைச்சர் பதவி வேண்டாம், அவரைத் தொல்லைப்படுத்தாதீர்கள்" என்று மாறன் எங்களிடம் சொன்னார். இது கட்சிக்காக மக்களுக்காக என்று நாங்கள் சொன்னோம்" என்று அந்தப் பொதுக்கூட்டத்தில் எம்.ஜி.ஆர். பேசினார்.

அதுமட்டுமல்ல; தந்தை பெரியாரின் பெருவிருப்பமும் அதுவே. அதுபற்றி 'ஜூனியர் விகடன்" (23.12.1992) இதழில், முன்னாள் அமைச்சர் க. இராசாராம் தரும் தகவல்களைப் பதிவு செய்ய விரும்புகிறேன். பெரியாரின் சீடரும், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர். நண்பரும், சட்டமன்றத் தலைவர், அமைச்சராக இருந்தவருமான க. இராஜாராம் கூறுவது என்ன?

......."காலம் கடத்தினால் பிரச்சினைகள் மூளக்கூடும், என்று மூதறிஞர் இராஜாஜி வீட்டிற்கு சென்றேன். பின்னர் பெருந்தலைவர் காமராஜர், முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத், பார்வர்ட் பிளாக் கட்சித் தலைவர் மூக்கைய்யா தேவர், எம்.ஜி.ஆர். மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களை சந்தித்து கருத்துக்களை அறிந்தேன்.

தனது ஒப்பற்ற வாரிசு மறைந்துவிட்டதே என்ற கவலை ஒருபுறம் இருந்தாலும், யாரை அடுத்த தமிழக முதல்வராகத் தேர்ந்தெடுப்பது என்ற கவலை அய்யாவுக்கு இருந்தது. எங்களிடத்தில் எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்தார். பின்னர் "தற்போதுள்ள சூழ்நிலையில் கலைஞர் கருணாநிதியே இருக்கட்டும்" என்றார். அன்றைக்குப் புரட்சி நடிகராக இருந்த எம்.ஜி.ஆர். காலை ஆறு மணிக்கெல்லாம் தோட்டத்துக்கு என்னை வரச் சொன்னார். ஒவ்வொருவரும் என்ன சொன்னார்கள் என்பதைக் கவனமாகக் கேட்டார்.

நான் பல இடங்களுக்கும் சுற்றி வந்தேன், தன்னிடம் தனியாகப் பேசுவதற்கு வசதியாக விடுதலை வீரமணியின் வீட்டில் சம்பந்தத்துடன் தந்தை பெரியார் வந்து தங்கிவிட்டார். அண்ணா மறைந்த பிறகு தொடர்ந்து மூன்று நாட்கள் ஓயாமல் தந்தை பெரியாருடன் மாறி, மாறி யோசித்து முடிவெடுத்த பிறகு, நான்காவது நாள் இரவு பன்னிரெண்டு மணி அளவில் கலைஞர் கருணாநிதியின் இல்லத்துக்கு என்னையும் வீரமணியையும் பெரியார் அனுப்பினார். கலைஞரைத் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள, தான் சொன்னதாகச் சொல்லிவிட்டு வரும்படியும், உடனே சட்டமன்ற உறுப்பினர் கூட்டத்தையும் கூட்டச்சொன்னார்.

"சட்டமன்றக் கூட்டத்தை உடனே கூட்ட வேண்டும்" என்றேன். இதற்குள் எப்படிக்கூட்டுவது என்று கலைஞர் யோசித்தார். இரங்கல் கூட்ட ஏற்பாடும் நடைபெற்றது. அதற்கு மறுநாளே, கட்சியின் சட்டமன்றக் கூட்டத்தையும் வைத்துவிட வேண்டும் என்ற பெரியாரின் விருப்பத்தையும் கூறினேன். பெரியாரின் கட்டளையாக அதை கலைஞர் ஏற்றார்.

மறுநாளே நடைபெற்ற சட்டமன்றக் கூட்டத்தில் பெரும்பான்மையோர் கலைஞர் மு. கருணாநிதியைத் தேர்ந்தெடுத்தார்கள்"

இவ்வாறு க. இராசாராம் எழுதியிருக்கிறார்.

எம்.ஜி.ஆர். அமைச்சரவையில் அமைச்சராக இருந்த ஆர்.எம். வீரப்பன் 1985ஆம் ஆண்டு ஒருமுறை தேவையின்றி கலைஞர் பெயரை இழுத்து, கருணாநிதியை முதலமைச்சராக ஆக்கியவர் எம்.ஜி.ஆர். என்றார், அதற்கு கலைஞர் பதில் ஏதும் சொல்லவில்லை.

1972ல் எம்.ஜி.ஆர். முதன்முதலில் அ.தி.மு.க. கட்சியைத் தொடங்கிய போது அவருடன் உடனிருந்து பின்தொடர்ந்தவரும், அ.தி.மு.க. அமைச்சரவை யில் மந்திரியாக இருந்தவருமான மூத்தவர் எஸ்.டி. சோமசுந்தரத்திடம் ஒருமுறை நிருபர்கள், "ஆர்.எம். வீரப்பன் இவ்வாறு கருணாநிதியை எம்.ஜி.ஆர். முதல்வர் ஆக்கியிருப்பதாகச் சொல்கிறாரே" என்றதற்கு, எஸ்.டி. சோமசுந்தரம். பதிலடி கொடுத்தார்.



"பேரறிஞர் அண்ணா இறந்தபோது கலைஞர், நாவலர் நெடுஞ்செழியன், யார் முதலமைச்சராக வருவது என்ற பேச்சு மேலெழுந்த வாரியாக பேசப்பட்டது. தி.மு.க. எம்.எல்.ஏ.,க்களில் தக்கோலம் ராமசாமி மட்டுமேதான் நாவலர் முதலமைச்சராக வர ஆதரவு தெரிவித்தார். மற்ற எம்.எல்.ஏக்கள் எல்லோரும் கருணாநிதியை ஆதரித்தார்கள். இருவரில் யாரை முதலமைச்சராகத் தேர்ந்தெடுப்பது என்பது குறித்து தி.மு.க. எம்.எல்.ஏக்கள் மத்தியில் தேர்தல் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு எம்.பிக்களும் அழைக்கப்பட்டார்கள். கூட்டத்தில் தக்கோலம் இராமசாமிதான், நாவலர் முதலமைச்சராக வரவேண்டும் என முன்மொழிந்தார். அவர் சொன்னதை யாரும் வழிமொழியவில்லை. எம்.ஜி.ஆர்தான், கலைஞர் கருணாநிதியை முதலமைச்சராக்கினார் என்று சொல்வது சரியல்ல; தி.மு.க ஏதோ இராமாபுரத் தோட்டத்தில் இருந்த பொருளல்ல; தி.மு.க. ஜனநாயக முறையில் வளர்க்கப்பட்ட இயக்கம். சட்டமன்ற உறுப்பினர்களின் மெஜாரிட்டி பலம் கருணாநிதிக்கு இருக்கிறது என்பதை எம்.ஜி.ஆர். தெரிந்து கொண்டதும், அந்தப் பக்கம் சேர்ந்து கொண்டார். ஆர்.எம். வீரப்பன் அவர்கள் அப்போது, எம்.ஜி.ஆரின் கணக்குப் பிள்ளை யாகத்தான் இருந்தார். தி.மு. கழகத்தின் அரசியல் விவரம் அவருக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை" என்று எஸ்.டி.எஸ். பதிலளித்தார்.

சரி; இது ஒருபுறமிருக்க, கலைஞர் அவர்கள் முதலமைச்சரானதும் தலைவரானதும், குறித்து திருவல்லிக்கேணியில் நடைபெற்ற கூட்டத்தில் நாவலர் நெடுஞ்செழியன் அவர்களே தந்த வாக்குமூலங்கள், பேசிய முக்கிய பகுதிகள் "நான் 1944ஆம் ஆண்டில் கழகத்தில் அடியெடுத்து வைத்த நாளிலிருந்து இதுவரை எதற்கும் இடையூறாக இருந்தவன் அல்ல, கட்டுப்பாட்டை ஒருபோதும் மீறியவன் அல்ல.

ஆனால், அண்ணா அவர்கள் மறைந்த பின்னர் ஒரு நிலைமை மாற்றம் வரும் என்று தெரிந்தவுடனேயே அந்த முயற்சிக்கு இடையூறாக இல்லாமல் மாறுபட்ட எண்ணத்திற்கு இடம் தராமல் ஒதுங்கிக் கொண்டேன்.

சகஜமான நிலையில்தான் தி.மு.க. சட்டமன்றத் தலைவர் தேர்தலும் நடைபெற்றது.

எனக்கோ, கலைஞர் கருணாநிதிக்கோ எள்ளளவும் ஒரு சிறிய கருத்து வேறுபாடும் இல்லை. இன்றைக்கும் இல்லை.

என்னுடைய முழு மதிப்பிற்குரிய தலைமையில்தான் கலைஞர் அவர்கள் இருந்து வருகிறார்கள். தி.மு.க. சட்டமன்றக் கட்சித் தலைவர் தேர்தல் நடந்தபோது, நாம் அறிஞர் அண்ணாவை இழந்து அழுத கண்ணீரைத் துடைக்க முடியாமல் இருந்தோம். அப்போது கலைஞர் கருணநிதியைத் தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்ற யோசனை வந்தபோது, "அவர் வருவதானால் ஏகமனதாக வரட்டும்" என்று கூறினேன்.

நான் அமைச்சரவையில் அங்கம் வகிக்க முடியாத சில சங்கடங்களின் சூழ்நிலை ஏற்பட்டது. அதற்குரிய காரணங்களை நான் உள்ளத்தில் வைத்துக் கொள்ள வேண்டுமே தவிர, பத்திரிகைகளுக்கோ பொதுமக்களுக்கோ தெரிவிக்கவேண்டிய அவசிமில்லை; வேண்டுமானால் நாங்களே பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று நான் நினைத்தேன்.

1967-ல் அமைச்சரவை அமைக்கப்படும்போது பலர் அமைச்சரவையில் இடம் கேட்டார்கள், அப்போது நான் அண்ணாவிடம் "நான் அமைச்சரவைக்கு வெளியே இருக்கிறேன், என்னைவிட்டு விடுங்கள், மற்றவர்களுக்குக் கூட நெடுஞ்செழியனுக்கே தரவில்லை என்று கூறிச் சமாதானப்படுத்தலாம்" என்றேன். கலைஞர் கருணாநிதியும் அவ்விதமே "என்னையும் விட்டுவிடுங்கள்'' என்று கூறினார். இதை அண்ணா அவர்கள் தி.மு.க. சட்டமன்றக் கட்சிக் கூட்டத்திலேயே கூறியிருக்கிறார். அண்ணா அவர்கள் மறைந்தவுடனே ஒரு போட்டி என்றால் சரியில்லை; ஐந்து பேர்தான் ஆதரிக்கிறார்கள் என்றாலும், அந்தப் பிளவு வளர்ந்து கட்சியில் சரிவு ஏற்படக்கூடாது. அண்ணாவுக்குப் பிறகு கட்சியை மேலும் வளர்க்க நம்மால் முடியாவிட்டாலும் அவர் வளர்த்திருந்த அளவுக்காவது வைத்திருக்க வேண்டும் என்ற காரணத்தால் நான் ஒதுங்கிக் கொண்டேன்.

நமக்கிருக்கும் கடமை எல்லாம் அண்ணா அவர்கள் அமைத்த அரசைத் தொடர்ந்து கட்டிக் காப்பதுதான்! கலைஞர் கருணாநிதியிடம் எனக்குத் தனிப்பட்ட முறையில் மதிப்பு உண்டு. கலைஞர் அவர்களின் அறிவையும், ஆற்றலையும், உழைப்பையும் நான் குறைத்து மதிப்பிடுபவன் அல்ல. கட்சிக்காக கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தவர் கலைஞர். எனக்குப் பேச எழுதத்தான் தெரியும். ஆனால், கலைஞர் அவர்களுக்குக் கதை எழுதத் தெரியும் நாடகம் எழுதத் தெரியும் கவிதை எழுதத் தெரியும் நடிப்பாற்றலும் உள்ளவர்.


ஒருமுறை கலைஞர் பிறந்த நாள் விழாவிற்காக, நான் கட்டுரை எழுதினேன். அறிவு ஆற்றலில் எழுத்து பேச்சு நடிப்பு சினிமா நாடகம் போன்ற துறைகளில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு அடுத்தபடியாக கலைஞர்தான் என்று எழுதினேன். கலைஞர்கூட "என்ன இப்படி எழுதிவிட்டீர்களே" என்று கேட்டார்.

ஆகவே, அவருக்கும் எனக்கும் எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு யாரும் எதையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை.

எதிர்க்கட்சிக்காரர்கள் என்னைப் பற்றி எழுதுகிறார்கள் என்றால் கட்சியின் மீதுள்ள நல்ல எண்ணத்திலா எழுதுகிறார்கள்? ஏதாவது பிளவு, சரிவு ஏற்படாதா என்று நினைத்து எழுதுகிறார்கள். அந்தப் பத்திரிகைகளைக்கூட நண்பர்கள் வாங்கக் கூடாது.

கலைஞர் கருணாநிதிக்கும் எனக்கும் நெருக்கம் அதிகம். வேறுசிலரைக் கண்டால்கூட நான் ஒதுங்குவேன். 25 ஆண்டுகளாக நானும் அவரும் ஒருமனதாகவே இருந்து வருகிறோம். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நான் படித்துக் கொண்டிருந்த போது எனக்கு இரண்டு ரூபாய் அனுப்பி என்னைப் பேச அழைத்தவரே கலைஞர் கருணாநிதிதான்.

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்



நாமும் வெளியூர் சென்று பேசப் போகிறோம் என்று பெருமையுடன் ரயிலில் ஏறி நான் புறப்பட்டதே கலைஞர் கருணாநிதியால்தான். அத்தகையவருடன் எனக்கு ஏற்பட்ட தொடர்பு இன்னும் மாறவில்லை.

கட்சித் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்போது நான் போட்டி வேண்டாம் என்று ஒதுங்கினேன். அமைச்சரவையில் சேர்வது என்பது அவரவரின் தனிப்பட்ட விருப்பம். இப்படித்தான் நாவலர் அவர்கள் நடந்த உண்மைகளைப் பிட்டுப் பிட்டுப் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.



எந்த நாவலர் நெடுஞ்செழியன் முதல்வர் ஆவதைத் தடுத்து, கலைஞர் முதல்வரானார் என்று அதிமுக அரைவேக்காடுகள் அடிக்கடிப் பேசுகிறார்களோ, அந்த நாவலரே, அன்று நடந்த விவரங்கள் பற்றி ஒப்புதல் வாக்குமூலம் தந்தபின், வேறு என்ன தரவுகள், சான்றுகள் வேண்டும்?

கலைஞர் தொடர்பான நூல்களை எடுத்துப் புரட்டியபோது கலைஞரின் நிர்வாகத் திறமை, தலைமையின் சிறப்பு, அவரது தியாகங்கள் நாட்டு மக்களுக்காக ஆற்றிய பணிகளையெல்லாம் கலைஞரோடு நீண்ட காலம் இனிய நண்பராக இருந்து, அவரோடு தி.மு.கழகத்தில் பணியாற்றிய எம்.ஜி.ஆர். இரண்டு சொற்பொழிவுகளின் மூலம் பட்டியலிட்டுக் காட்டியிருப்பதை நான் கண்ணுறலாம்.

அந்த இரு உரைகளையும் படித்தபோது கலைஞரைப் பற்றி இவ்வளவு அழகாகதுல்லியமாக வேறு யாராலும் இந்த அளவுக்கு அவரது குணநலன்களைச் சொல்லியிருக்கிறார்களா என்ற வியப்பே மேலோங்கியது.

1972ஆம் வருடம் ஏப்ரல் 8, 9 ஆகிய தேதிகளில் செங்கற்பட்டு மாவட்ட தி.மு.கழக மாநாடு காஞ்சிபுரத்தில் நடந்தது. என்.எஸ். தென்னரசு தலைமையில் நடைபெற்ற அந்த மாநாட்டினை ஆலடி அருணா திறந்து வைத்தார்.

அப்போது எம்.ஜி.ஆர். தி.மு.கழகத்தின் பொருளாளராக இருந்தார். அந்த மாநாடு நடைபெற்ற சமயத்தில், சில ஏடுகளில் கழகத்தைப் பற்றியும், எம்.ஜி.ஆரைப் பற்றியும் வெளியிடப்பட்டிருந்த செய்திகளுக்குத் தமது உரையில் எம்.ஜி.ஆர். மறுப்பு தெரிவித்தார்.

அறிஞர்அண்ணா மறைந்தபின், கலைஞர் முதல்வரானது எப்படி என்பது பற்றி ஒரு தகவலை முதன்முறையாக அவர் அந்த மாநாட்டில் வெளியிட்டார். இதோ, எம்.ஜி.ஆரே பேசுகிறார்.

"தி.மு.க. மக்கள் கட்சி, இது தனி மனிதக் கட்சி அல்ல. அண்ணா அவர்களின் கழகத்தை உருவாக்கியவர்கள் கலைஞர் அவர்கள் இதனைக் கட்டிக் காத்து வருகிறார்கள்.

கழகத்தைப் பிளவுபடுத்தச் சிலர் நினைக்கிறார்கள். அப்படி நினைப்போரின் நினைப்புக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன், கழகத்தைப் பிளவுபடுத்த எவரும் பிறக்கவில்லை, இனிமேலும் பிறக்கப் போவதுமில்லை.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மறைந்த பிறகு முதலமைச்சர் பொறுப்புக்கு வருவது பற்றி நமது கலைஞர் அவர்கள் என்ன சொன்னார் என்று இதுவரை நான் எந்த மேடையிலும் சொல்லவில்லை. இங்கே அதைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.



முதலமைச்சர் பொறுப்புக்கு நான் வர விரும்பவில்லை, எனக்கு வேண்டாம் என்றுதான் அவர் தெரிவித்தார். அதுமட்டுமல்ல, தம்பி மாறன் அவர்களையும் அனுப்பிவைத்து தனக்கு இந்தப் பதவி வேண்டாம் என்று தெரிவித்திடச் சொன்னார்.

கலைஞரின் துணைவியாரும் இதையே தெரிவித்தார். ஆனால் நாங்கள்தான் அதை மறுத்தோம். ஆகவே, கலைஞர் அவர்கள் இந்தப் பதவியை விரும்பியவரல்ல; வேண்டுமென்று கேட்கவுமில்லை. மக்களின் விருப்பத்தை நிறைவேற்றத்தான் அவர் முதலமைச்சர் ஆனார். நாங்கள் எல்லாம் சேர்ந்துதான் அந்தச் சுமையைச் (முதலமைச்சர் பொறுப்பு) சுமக்க வைத்தோம். அவர் படங்களுக்கு வசனமெழுதினால் பல ஆயிரங்களைச் சம்பாதிக்க முடியும், அதற்குக்கூட தேவையில்லாமல் இந்தச் சுமையை மக்களுக்காக அவர் ஏற்றிருக்கிறார்" என்று பேசினார் எம்.ஜி.ஆர்.

கலைஞர் வேண்டாம் என்று மறுத்தபோதும், எல்லோரும் சேர்ந்து கட்டாயப்படுத்தித்தான் அவரை முதல்வர் ஆக்கினார்கள்" என்பதைத் தெரிவித்த எம்.ஜி.ஆர். இன்னொரு சமயம் அவர்தான் முதல்வராக வேண்டும் என்று வலியுறுத்தியவர்களின் முடிவு எவ்வளவு சரியானது என்பதை நிரூபிப்பதுபோல் கலைஞரின் ஆட்சித்திறன் அமைந்தது என்பதை விளக்கி பேசினார். "1971ஆம் ஆண்டு ஜூன் மாதம் எம்.ஜி.ஆர். நான் வெற்றிபெற்ற பரங்கிமலைத் தொகுதியில் 'கருணாநிதிபுரம்' என்று ஒரு குடியிருப்புப் பகுதிக்குப் பெயர் சூட்டி அதற்கான பெயர்ப் பலகையினையும் திறந்து வைத்தார். அந்த விழாவிலே பேசிய அவர் கலைஞரின் தியாகங்கள் நிர்வாகத் திறமை பற்றி எல்லாம் பட்டியலிட்டுப் பேசினார்.

அவரது உரை வருமாறு:

தமிழக முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், எனக்கும் இருபதாண்டுகளாகத் தொடர்பு உண்டு, அப்போது நான் கோவையிலே இருந்தேன். ஊருக்குள் பிளேக் என்ற நோய் பரவிக் கொண்டிருந்த காரணத்தால் குடும்பத்தை ஊருக்கு அனுப்பிவிட்டு கலைஞர் என் வீட்டில் வந்து தங்கினார். என் வீடு என்றால் அப்போது 12 ரூபாய் வாடகை வீடுதான். இரண்டு பேரும் ஒன்றாக இருந்தோம். ஆனால், அவர் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவராகவும், நான் காங்கிரஸ்காரனாகவும் இருந்தோம்.

அப்போதெல்லாம் அவரை என் பக்கம் இழுக்க முயற்சித்தேன். ஆனால் நிலைமை எப்படி ஆயிற்று? நான்தான் அவர் பக்கம் ஈர்க்கப்பட்டேன். இன்று அவர் கழகத் தலைவராகவும், நான் கழகத்தின் பொருளாளராகவும் இருக்கும் நிலைமைக்கு அந்த ஈர்ப்பு நடைபெற்றுள்ளது. கலைஞர் அவர்கள் இன்று முதல்வராக இருக்கிறார் என்பதால்தான் அவருக்குப் பெருமையும் புகழும் என்று யாராவது நினைத்தால் அது மாபெரும் தவறாகும். இந்தப் பதவிகள் எல்லாம் அவரைத் தேடி வந்து அமைவதற்கு முன்பே பேருக்கும் புகழுக்கும் உரியவராக இருப்பவர் கலைஞர்.

கோவையில் இருந்தபோது பல்லாண்டுகளுக்கு முன்பு 'ராஜகுமாரி', 'அபிமன்யு' என்ற படங்களுக்கெல்லாம் கலைஞர் உரையாடல்களை எழுதினார். அந்தப் படங்களில் அவருடைய பெயர் வெளியிடப்படவில்லை.

இப்படிப் பிரபலப்படுத்தப்படவில்லையே என்பதற்காக அவர் தம்முடைய உழைப்பை திறமையைக் காட்டாமல் இருந்ததில்லை. சலியாது உழைத்தார். தன் பெயர் வரவில்லை என்றாலும் தன் கருத்து வந்திருக்கிறது என்ற திருப்தியில் உழைத்தார். அதுவும் கொள்கைப் பிடிப்புள்ள தம் கருத்துகளை படத்தில் அவர் நுழைக்கத் தவறியதே இல்லை. தனக்கென ஒரு கொள்கை, தனக்கென தலைவர் என்று வகுத்துக்கொண்டு பற்றோடும் பிடிப்போடும் அயராது உழைத்து வந்தவர் கலைஞர்.

கொள்கைப் பிடிப்பு காரணமாகச் சமயம் வரும்போது அண்ணாவுடனும் சரி; என்னுடனும் சரி; கலைஞர் வாதிடுவதற்கு ஒருபோதும் தயங்கியதில்லை. அதேபோலக் கழகத்துக்கு ஒரு கேடு வருகிறது என்றால், தன் உயிரைக் கூட மதிக்காமல் முனைந்து பாடுபடுவதில் அவருக்கு இணையான செயலாற்றல் யாருக்கும் இருந்ததில்லை.

ஒரு தடவை பாண்டிச்சேரியில் அவர் சுயமரியாதை இயக்கத்தினர் பிரச்சாரத்திற்காகச் சென்றிருந்தபோது, அவரைத் தெருவில் தள்ளி அடித்துச் சாக்கடையில் வீசிவிட்டுப் போனார்கள். இரத்தம் சொட்டச் சொட்ட எழுந்துபோய் ஒரு வீட்டுக்குள் நுழைந்தபோது அந்த வீட்டுக்குள் சீட்டாடிக் கொண்டிருந்தவர்கள் யார் தெரியுமா?

அவரை அடிப்பதற்கு யார் ஆட்களை அனுப்பினார்களோ அவர்களே உள்ளே இருந்தார்கள். அங்கிருந்து தப்புவதற்கு அவர் எப்பாடு பட்டிருப்பார் என்பதை விளக்க வேண்டியதில்லை. இப்படியெல்லாம் அடிபட்டுத் தொல்லைகள் மிகத் தாங்கியவர் கலைஞர். கல்லக்குடிப் போராட்டத்தில் உயிரை வெல்லமாக நினைக்காமல் தண்டவாளத்தில் முதலில் படுத்தவர் கலைஞர்.

தமிழ் காக்க வேண்டும், தமிழ் மானம் காக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளோடு பல்லாண்டு காலம் ஓயாது உழைத்துச் செய்த தியாகத்தின் பலனாக இன்று அவரைத் தேடி பதவி கிடைத்திருக்கிறது.

சிலருக்குப் பதவி கிடைத்தால் நாடு குட்டிச்சுவராகி விடுகிறது. ஆனால் நமது கலைஞருக்குப் பதவி கிடைத்தால் நாடு வாழ்கிறது. ஏழை எளியவரின் நம்பிக்கை எல்லாம் அவரது விழிகளை நோக்கி உயர்கின்றன.

கலைஞர் பெற்றுள்ள நல்ல அனுபவம் திறமை, செயலாற்றல், அறிவுணர்வுகள் எல்லாம் இந்தத தமிழ் மண் நலம் பெறும்படி பரிமளிக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழகத்தின் முதலமைச்சர் ஆகிய இந்த இரண்டு பொறுப்புக்களையும் வகித்துவரும் கலைஞர் அவர்கள் எத்துறையில் திரும்பினாலும் அத்துறை சிறப்படைகிறது. எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குகிறார் அவர்.

கட்சியின் ஒவ்வொரு தொண்டனையும் தலைவனையும் நன்றாகப் புரிந்து வைத்துக் கொண்டு அவர் கழகத்தைச் சீராக நடத்திச் செல்கிறார். தமிழகத்தின் முதல்வர் என்ற முறையில் நல்ல நிர்வாகத் திறமையோடு கட்சிப் பாகுபாடு இல்லாமல் அரசாங்கத்தை நடத்திச் செல்கிறார் கலைஞர். எல்லாத் தரப்பினருக்கும் தேவையான நன்மைகளை உரிய நேரத்தில் செய்துவரும் ஒரே முதல்வர் கலைஞர் அவர்கள்தான்.

எந்தக் கட்சியிலும் காணக்கிடைக்காத அருங்குணங்களைப் பெற்ற முதல்வர் கலைஞர் அவர்கள் அவரது அறிவாற்றலுக்கும் நல்ல பண்பாட்டுக்கும், அவருக்கு இப்போதுள்ள முதல்வர் பதவி மட்டும் போதாது, இன்னும் உயரிய பதவிகள் எல்லாம் அவரைத் தேடிவரும் காலம் விரைவில் வந்தே தீரும். இத்தகைய உயரிய மனிதரின் பெயரால் இந்தப் பகுதி "கருணாநிதிபுரம்" என்று அமையப்பெற்றது பெரும் பேறாகும்" என்றார் எம்.ஜி.ஆர்.

இவ்வாறெல்லாம் நாவலர், எம்.ஜி.ஆர், க. இராசாராம், எஸ்,டி,எஸ், ஆகியோர் தந்த ஆதாரங்கள் இருக்க, அதற்கு மாறாக, தேர்தல் நேரக் கோமாளி வந்து விட்டேன் என்று சொல்வதைப்போல் உண்மைக்கு மாறான செய்திகளை எடப்பாடிகளும், ஓ.பி.எஸ்களும், அதிமுக எடுபிடிகளும் உளறி வருகிறார்கள். ஆகவே, அண்ணாவிற்குப்பின், கலைஞர் முதல்வரானது மேற்குறிப்பிட்டவர்கள் தரும் தகவல்படி,

9.2.1969 அன்று சட்டமன்ற தி.மு.க. கட்சி அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் நடைபெற்றது. சட்டமன்றக் கட்சித் தலைவர் எனப்படும் முதலமைச்சர் பொறுப்புக்கான தேர்தலுக்குத் தலைமையேற்குமாறு அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்களை து.ப. அழகமுத்து முன்மொழிந்து கவிஞர் கா.வேழ வேந்தன் வழிமொழிந்தார். வேட்பாளர் பெயர்களை முன்மொழியு மாறு கூட்டத் தலைவர் அறிவிக்கவே, கலைஞர் பெயரை அமைச்சர் மதியழகன் முன்மொழிந்திட, அமைச்சர் சத்தியவாணிமுத்து வழிமொழிந்திட்டார். அடுத்து, நாவலர் பெயரை சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஜே. இராமசாமியும், வி.டி அண்ணாமலையும் முன்மொழிந்து வழிமொழிந்தனர். உடனே நாவலர் எழுந்து, முதலமைச்சர் பொறுப்புக்கான போட்டியிலிருந்து தான் விலகிக் கொள்வதாக அறிவித்தார். இதுதான் உண்மை வரலாறு. இதுதான் நடந்த செய்தி. இதனை 'நெஞ்சுக்கு நீதி' நூலில் கலைஞர் பதிவும் செய்திருக்கிறார்.

1969 ஜூலை 27 அன்று நடந்த 4வது பொதுக்குழுவால் முதன் முதலில் கழகத் தலைவராக கலைஞர் அவர்கள் தேர்வு செய்யப்பட்டார். 7.7.1974 5வது பொதுக்குழுவிலும், 18.6.1978இல் 6வது பொதுக்குழுவிலும் 25.6.1983 7வது பொதுக்குழுவிலும் 2.2.1988 8வது பொதுக்குழுவிலும் 2.6.1992 9வது பொதுக்குழுவிலும் 27.7.1997 9வது பொதுக்குழுவிலும் 8.4.2000 11வது பொதுக்குழுவிலும் 27.12.2008 13வது பொதுக்குழுவிலும் 9.1.2015 14வது பொதுக்குழுவிலும் எனத் தொடர்ந்து 11முறை கலைஞர் அவர்கள் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணிபுரிந்து வந்தார் என்பதே வரலாறு கூறும் செய்திகளாகும்.

பலர் வரலாற்றை உருப்போடுவார்கள். ஆனால், ஒரு சிலர்தாம் வரலாற்றை உருவாக்கிறார்கள்!